Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளல் பெருமான்
எனும் சிதம்பரம் **ராமலிங்கஸ்வாமிகள்**
திருவாய் மலர்ந்தருளிய

ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையும் அதன் உரையும்

8988

கோட்டையூர்

தேனப்ப பழநியப்ப தேனப்பன்

1993

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-4

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

கோவிலூர் ஆண்டவர் நூலகம் கோவிலூர்
A. No. 8968
R65 (வள்)

திருவருட் பிரகாச வள்ளல் பெருமான்
சிதம்பரம் ராமலிங்க ஸ்வாமிகள் அருளிய

ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையும் அதன் உரையும்

வடலூர் முத்துராமலிங்கம்

தேனப்ப பழநியப்ப தேனப்பன்
40, 41, ஆஸ்பத்திரி வீதி, கோட்டையூர் - 623 106

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-4



திருவருட்பிரகாச வள்ளலார்

தோற்றம் : 5-10-1823 சித்தி : 30-1-1874

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை

முன்னுரை

திருஞான சம்பந்தர் வள்ளற்பெருமானின் சற்குரு. திருஞானசம்பந்தருடைய நெறி சற்புத்திர நெறி என்பர். அவருக்கு முன்னே திருநாவுக்கரசர் நெறியாகிய அடிமை நெறி — என்பது தன்னைப் பரிபூரணமாக உயிர்ப்பணிக்கு அர்ப்பணிக்கிற நெறி. அதற்கு மேல் மூன்றாவது படியில் நிற்பவர் சுந்தரர். அவர் நெறிக்கு 'சகமார்க்கம்' என்று கூறுவர். இங்கு சகம் என்பது நேயர், நண்பர் என்ற பொருளில் அமைகிறது. சரியை, கிரியை, யோகம், நாணம் என்ற நான்கு நெறிகளில் 4வது நெறிதான் சன்மார்க்கம். இதனை முழு உண்மை நெறி என்று குறிப்பிட வேண்டும். உண்மை, முழு உண்மை, உண்மை தவிர பிறிதொன்று மில்லை என்று அமைவது தான் சன்மார்க்கம். சத்திய மார்க்கம் என்பதைத் தான் சன்மார்க்கம் என்று வழங்கு கிறோம். இந்த நான்கு மார்க்கங்களும் முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஒழுகிய ஒழுக்கத்தை குறிப்பன. இந்த நான்குமே அருளியல் அடிப்படையில் தான் தோன்றி வளர்ந்திருக்கின்றன. வானம் என்ற முதல் பூதம் ஒளியைக் குறிப்பது. அதிலிருந்து காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற நான்கும் வளர்கின்றன. இதைப்போலவே அருளிலிருந்துதான் உண்மை நெறி, நண்பர் நெறி, பிள்ளை நெறி, அடிமை நெறி என்ற

Koviloor Digital Library

நான்கும் தோன்றியிருக்கின்றன. இந்த உண்மையை வள்ளல் பெருமானின் இரு சொற்றொடர்களால் உணர்ந்து கொள்கிறோம்.

'அருளலாது அணுவும் அசைந்திடாது. அதனால் அருள் நலம் பரவுக என்று அறைந்த மெய்ச்சிவமே'
'அடிமையாக்கி பிள்ளையாக்கி நேயனாக்கியே அடிகளாக்கி கொண்டோம் என்னை அவலம் நீக்கியே'

இங்கு அடிகள் என்ற சொல் நூற்றுக்கு நூறு அன்புடைமையை குறிப்பது. 'அஃருடைய அடிகள் அருள் மாலை' என்பது மாணிக்கவாசகப் பெருமானை வள்ளலார் பாடிப் பரவுவதாகும். இந்தப் பதிகத்தில் உலக அனுபவம், உயிர் அனுபவம், அருள் அனுபவம், இறை அனுபவம், என்ற நான்கையும் திருஞான சம்பந்தர் விளக்கியபடியே வள்ளலார் பாடியிருக்கிறார். உலக அனுபவத்தையே உலகியல் உணர்வு என்று முதல் பாடல் தெரிவிக்கிறது. எடுத்துக் கொண்ட செயலை திறமையாக செய்து முடிப் பதற்கு வேண்டிய உணர்வு தான் உலகியல் உணர்வு. இதையே உலக அனுபவம் என்பர். திருஞான சம்பந்தர் வள்ளல் பெருமானை எப்படி படிப்படியாக உயர்த்தியிருக் கிறார் என்பதைத்தான் இந்தப் பதிகத்தில் பார்க்கிறோம்.

சென்னை. 1993 வடலூர் முத்துராமலிங்கம்

Koviloor Digital Library

1. உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியஓர் பருவத்
திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினுன்
விலகுறுங் காலத் தடிக்கடி ஏற
விடுத்துப்பின் விலகுரு தளித்தாய்
திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே.

திருஞான சம்பந்தப் பெருமான் வள்ளல் பெருமானைத் தொட்டில் பருவத்திலேயே அவருள்ளே புகுந்து இருந்து அருள்நெறியில் முன்னேறச் செய்திருக்கிறார்.

இங்கே அருள் நெறி என்பது உண்மை நெறியைத்தான் குறிக்கிறது. உலக அனுபவத்தின் அடிப்படையான உணர்வு தான் உலகியல் உணர்வு. எடுத்துக்கொண்ட செயலை நிறை வேற்றும் திறமை தோன்றுவதற்கு முன்னரே சம்பந்தர் அவருள் புகுந்து இருந்து அருள் நெறியில் முன்னேறச் செய்து வந்திருக்கிறார். நான் அருள் நெறியிலிருந்து அடிக் கடி விலக நேர்ந்தபோது போதுமான திறமையையும், உணர் வையையும் கொடுத்து எனக்கு உண்மைக் குருவாக இருந்து உயர்த்தியிருக்கிறார்என்று வள்ளலார் இந்த பாடலில் கூறு கிறார். முடிவாக உலகியல் அனுபவத்திறமை தோன்று வதற்கு அதிலிருந்து விலகாமல் நிலைபெறச் செய்திருக் கிறார். நனவு நிலையில் பரிபூரணமாக அறிவை அடை வதற்கு உரிய இடம் புருவ மத்தி என்பர். அதனை திலகம் என்ற சொல்லால் குறித்திருக்கிறார்.

Koviloor Digital Library

திலக நாற்காழி என்ற சொற்றொடர் குறிப்பது என்ன? நிலையான அனுபவத்தைப் பெறுவதற்கு வேண்டிய மனோ உறுதியை தருவதுதான் சீர்காழி. சீர் என்பதற்கு ஏறியும், இறங்கியும் அலைபாயும் நிலையில்லாமல் இருப்பது. சீராக வாழ்வதற்கு உரிய உறுதியைத் தருவதுதான் சீர்காழி. காழி என்பது உறுதியையும் விதையையும் வயிரத்தையும் குறிக்கும். காழில் கனி (காழ் இல் கனி) என்பது விதையற்ற பழத்தை குறிக்கும். (உ. ம்) வாழைப்பழம். திலகம் நற் காழி என்று மூன்று சொற்களும் நனவிலே உறுதியாக எடுத்த செயல்களை செய்வது. வாழ்க்கையில் போதுமானவைராக்கிய பலம் பெற்று துரியம் என்கிற நான்காவது அனுபவத்திற்கு ஏறுவதைக் குறிக்கும். அப்போது உறுதியாக இருந்தவர் சம்பந்தப்பெருமான். அவரை தெள்ளமுதாம் சிவகுருவே என்று வள்ளலார் பாராட்டுகிறார். தெள்ளமுது என்பது, நனவிலிருந்து துரிய அனுபவத்திற்கு உயரும்போது உடம்பில் ஊருகின்ற தூய அமுதத்தை குறிப்பிடுவது, சிவம் உள்ளதை விளங்கி கொள்வதால் உண்டாகிற இன்பத்தையே குறிக்கிறது. சிவம் என்ற சொல்லில் உள்ள மூன்று எழுத்துக்களில் 'சி' என்ற முதல் எழுத்து உள்ளதை குறிக்கிறது. 'வ' என்பது வீளங்குவதை குறிக்கிறது. 'ம்' என்பது உள்ளது விளங்குவதால் உண்டாகிற இன்பத்தையே குறிக்கிறது. இதனை வேறு ஓர் இடத்தில், உள்ளதனை உள்ளபடி உணர உணர்திணையே என்று அனுபவித்து பாடி இருக்கிறார் வள்ளலார். உள்ளதை உள்ளபடி உணரும்போதுதான் இன்பம்தோன்றுகிறது.

Koviloor Digital Library

2. உயிர்அனு பவம்உற்றிடில் அதனிடத்தே
 ஓங்கருள் அனுபவம் உறும் அச்
செயிரில்நல் அனுப வத்திலே சுத்த
 சிவஅனு பவம் உறும் என்றாய்
பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப்
 பால்மகிழ்ந் துண்டு மெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான
 பந்தன்என் றோங்குசற் குருவே

கருத்து-எடுத்த செயலை திறமையாக செய்து முடித்து அடையும் இன்பமே, உலக அனுபவம் ஆகிறது. இதற்கு அடிப்படையாக இருந்து உதவி செய்பவை, உடம்பும் மனமும் ஆகும். உயிர் அனுபவம் என்பது உடம்பையும் மனதையும் கடந்து நின்று, ஒருவர் தன்னுடைய உண்மை நிலையை உள்ளபடி அறிந்து கொள்வது ஆகும். இதனையே ''தனு கரண ஆதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவம்'' என்பர். இந்த உயிர் அனுபவத்தை பெரும்பொழுது எல்லா உயிர்களுக்கும் இன்பம் தருகிற அருள் அனுபவம் தோன்று கிறது. இந்தத்தூய அருள் அனுபவத்தில்தான், உள்ளது உள்ளபடியே விளங்கி இன்பம் தருகின்ற சில அனுபவம் தோன்றுகிறது. தன் மூன்றாவது வயதிலேயே இறைவி வழங்கிய ஞானப்பாலை அருந்தியவர் திருஞானசம்பந்தர். மூன்றாவது ஆண்டு வரையிலும் மொழி வளர்ச்சிக்கு உரிய பயிற்சி உருவாகிறது. இதனையே பயிலும் மூவாண்டு என்று குறிக்கின்றார். மிகமிக சிறு குழந்தைப் பருவத்திலேயே சம்பந்தப் பெருமான் வள்ளலாரே உள்ளே அமர்ந்து இருந்து

Koviloor Digital Library

அருள்நெறியில் முன்னேறச் செய்து இருக்கிறார். இதனை முதல் பாடலிலும், இப்பாடலிலும் குறிப்பிட்டு இருக்கிறார். திருஞானசம்பந்தரை மெய்ப்பொருள் அறிவுப்பயிர் வளர்த்த குருமாமணியே என்று வள்ளலார் அவரை வணங்குகிறார்.

3. தத்துவநிலைகள் தனித்தனி ஏறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
நத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி
உற்றிடல் உயிரனு பவம்என்
றித்துணை வெளியின் என்னைஎன் னிடத்தே
இருந்தவா றளித்தனை அன்றோ
சித்தநற் காழி ஞானசம் பந்தச்
செல்வமே எனதுசற் குருவே.

கருத்து: உலக அனுபவம் பெற்ற உடனே, உடம்பு, மனம் என்ற இரண்டின் துணை இல்லாமலே, உயிர் எப்படி இறைவனால் இயக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுவதே உயிர் அனுபவம் ஆகிறது. மாமனிதர்களுடைய துணையால் அறியும் அறிவே உயிர் அனுபவ அறிவாகிறது. இதனையே நின்னை நீ இன்றி உற்றிடல் என்கிறார். திருஞானசம்பந்தர் போன்ற மாமனிதர் உதவியால்தான் வள்ளலார், உயிர் அனுபவம் பெற்று இருக்கிறார். இதனை என்னை என்னிடத்தே இருந்தவாறு அளித்தனை அன்றோ என்கிறார். மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கும் ஒருமுகபடாத போதுதான் திரிபு, மயக்கம், தூக்கம் என்று மூன்றும் உண்டாகிறது. மனம் முதலியவற்றின் அலைகள்

Koviloor Digital Library

ஐந்து. அவையாவன அறிவு, திரிபு, மயக்கம், தூக்கம், நினைப்பு, இவற்றுள் அறிவும் நினைப்பும்தான் குற்ற மற்றவை மற்ற மூன்றும் (திரிபு, மயக்கம், தூக்கம்) பழுது உடையவை. இவற்றை ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்ற பழமொழி உணர்த்துகிறது.

எனக்கு இந்த உண்மைகள் எல்லாவற்றையும் தெளிவாக உண்மை நெறியில் உணர்த்திய குருவே வந்தனம். தனிப்பர நாத மாந்தவம் என்பது எதை குறிக்கிறது.?

கீழ் ஆறு ஆதாரங்கள் என்பன மூலாதாரம், சுவாதிஷ் டானம், மனிபூரகம், அனாகதம், விசுத்தீ, ஆக்ஞை, இந்த ஆறையும்கடந்து கண்டத்திற்கு மேல்உள்ள 6 ஆதாரங்களை மேல் ஆதாரம் என்பர். இவை 1. நாதம் 2. விந்து 3. பரநாதம் 4. பரவந்து 5. திக்ராந்தம் (இடி போன்றது) 6. அதீக்ராந்தம் (மின்னல் போன்றது) இவைகளே மேல் 6 ஆதாரங்கள் என்பர். இவற்றையே 1. வீதி 2. மேடை 3. கூடம் 4 மாடம் 5. ஜோதித்தம்பம் 6. பொற்கோயில் என ''ஆணிப்பொன் அம்பலம்'' என்கின்ற பாடலில் வள்ளலார் உலகிற்கு தெரிவித்திருக்கிறார். இவற்றுள் மூன்றா வது மேல் ஆதாரமே, பரநாததலம் என்பது இந்த இடத்தில் இருந்து கொண்டுதான், உயிர், உலக அனுபவத்தை கடந்து, உயிர் அனுபவம் பெறுகிறது. இதில் விளைவாகவே அருள் அனுபவம், இறை அனுபவம் தோன்றுகிறது, இதை விளக்குகிறது இனி வரும் பாடல்.

Koviloor Digital Library

4. அருள் அனுபவம்

தனிப்பர நாத வெளியின்மேல் நினது
தன்மயந் தன்மயம் ஆக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புரு இயல்பாய்
இருந்ததே அருளனு பவம்என்
றெனக்கருள் புரிந்தாய் ஞானசம்பந்தன்
என்னும்என் சற்குரு மணியே.

தனிப்பர நாத வெளியில் தோன்றுவது அருள் அனுபவம். ஆதலால் அதை விளக்கிச் சொல்லும் பொழுது கேட்பவர்களுக்கு எந்த அனுபவ உண்மையும் தோன்றாது. ஆதலால் அருள் அனுபவத்தினால் யாரும் மகிழ்ச்சி அடையும்படி எந்த விளக்கமும் தர இயலாது. சாதாரண மக்களுக்கு மேல் ஆதாரங்களில் நாத வெளியும், விந்து வெளியும் மட்டுமே ஓரளவு புரியும் உயிர் அனுபவம் பெற்று இருப்பவர்களுக்கு மூன்றாவது, நான்காவது, மேல் ஆதாரங்கள் ஆகிய பர நாத வெளியும் பரவிந்து வெளியும் புரியும். அதனால் அருள் அனுபவத்தை விளக்கிச் சொல்லுகிற பொழுது, அது தரும் அனுபவத்தை புரிந்துகொண்டு மகிழ்ச்சி அடையும் பாக்கியம் மற்றவர்களுக்கு இல்லை. 6 மேல் ஆதாரங்களில் இன்னும் இரண்டு ஆதாரங்கள் இடி, மின்னல் என்கிற திக்ராந்தம் அதிக்ராந்தம் என்பவை. இவற்றையே ஆணிப்பொன் அம்பலம் என்ற பாடலில் தான் அனுபவித்ததை வள்ளலார்

Koviloor Digital Library

பாடி இருக்கிறார். அவை வீதி, மேடை, கூடம், மாடம், ஜோதித்தம்பம், பொற்கோயில் என்பன. மின்னல் போல எல்லாச் செய்திகளையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இறை அனுபவம் உடையவர்களுக்கு மட்டுமே உண்டு. இதனை அடுத்த பாடலில் பார்க்க போகிறோம். அதற்கு முன் சம்பந்தரை வள்ளலார் எப்படி அழைக்கிறார் என்பதையும் புரிந்து கொள்வோம். ஞான சம்பந்தர் வள்ளலாருக்கு சற்குருவாக தோன்றி அவர் வாழ்க்கையில் பலவகை வெற்றி களையும் அடையும்படி உதவி செய்து இருக்கிறார். மாமனிதர் உதவி இல்லாமல், அருள் இறை அனுபவங்களை யாரும் அடைந்து இன்புற இயலாது.

5. வெட்டவெளி:

உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணு அப்பால் அப்படிக் கப்பால்
வெறுவெளி சிவ அனுபவம் என்
றுள்ளுற அளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே.

''வெட்டவெளி தன்னை மெய் என்று இருப்பார்க்கு பட்டயம் எதுக்கடி'' என்பது சித்தர் வாக்கு. இறை அனுபவம் உடையவர்களை பாதுகாப்பதற்கு பட்டாகத்தி முதலிய போர் கருவிகள் தேவையில்லை. இதனை இன்றைய

Koviloor Digital Library

புதிய பூத நூலில் பேர்ஆற்றல் நிரம்பியது வெற்றிடம் எனக் கூறுகின்றனர்.

திருஞான சம்பந்தர் சில அனுபவம் என்கிற இறை அனுபவத்தை வள்ளலாருக்கு விளக்கி சொல்லி இருக்கிறார். இதில் வரும் வெற்றிடம் என்பது பேராற்றல் நிரம்பிய இடத்தையே குறிக்கிறது. இறை அனுபவம் இன்னது என்று பகுத்து உணரும்படி விரித்து சொல்லும் ஆற்றல் சம்பந்தர் போன்ற மாமனிதருக்கு உண்டு. வள்ளலார் சம்பந்தருக்கு மாணவர் ஆதலின், அவருக்கு மட்டும் விளங்கும்படி விரித்துசொல்லும் ஆற்றல் திருஞான சம்பந் தருக்கே உண்டு. திரு, ஞானம், சம்பந்தம் என்ற மூன்று சொற்களையும் உற்று நோக்கினால், சம்பந்தருடைய பெருமை நன்கு விளங்கும். திரு என்பது மெய் பொருளை குறிக்கிறது. மெய்பொருள் இறைவனை குறிப்பது தான். திருஞானம் என்பதற்கு இறைவனைபற்றிய மெய்யுணர்வு தான் சம்பந்தம் என்ற சொல் இறைவனை பற்றிய உள்ள உணர்வை எல்லா பொருள்களோடும் சம்பந்தப்படுத்தி விளக்கும் பேரருள் உடையவர் என்று நமக்கு விளக்குகிறது. இந்தப்பாடலில், நல்லதாய் என்றால் நெருங்கி இருப்பதை குறிக்கிறது. நானதாய், தானதாய் என்ற இரண்டு சொற் களும் இறைவன் இல்லை என்றால் தான் இல்லை என்பதை உணர்த்துகிறது. இந்த உண்மையைத்தான் கடவுள் உயிர்க்கு உயிராக விளங்குபவர், உள் ஒளியாக உள்ளவர் என்று வள்ளலார் தெரிவிக்கிறார். வள்ளலார் உலகத்தில் உள்ள ஒளி முழுவதையும் மூன்றாக பிரித்து விளக்குகிறார்.

Koviloor Digital Library

அவை இந்த உடம்பை குறிக்கும் வெள்ளொளி, மனதை குறிக்கும் உயிர் உயிர் ஒளி, உயிரையே இயக்குகிற உள்ளொளி என்று சொல்லி இருக்கிறார். இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் இந்த 3 ஒளி களால் ஆனவையே. எல்லாப் பொருள்களிலும் இறைவன் இருக்கிறார். ஆதலினால் ஒளி ஒன்றே உலகத்தை உருவாக்கி இருக்கிறது. இறைவனும் ஒளியாகவே விளங்கு கிறான் என்பதை ''ஒளி ஒன்றே அண்ட பகிற் அண்ட மெல்லாம் தான்'' என்று பாடி இருக்கிறார். இங்கே தான் என்பது உள்ளொளியாகிய இறைவனைத்தான் குறிக்கிறது. வள்ளல்பெருமானுக்கு ஒன்றாக உள்ளத்தில் பதியும்படி திருஞான சம்பந்தபெருமான் சொல்லி இருக்கிறார். இதைத் தான் உள்ளூற அளித்த ஞான சம்பந்த உத்தம சற்குருவே என்ற கடைசி வரி நினைவு ஊட்டுகிறது. இந்த உண்மையை தெரிவிக்கிற ஒருவரை மட்டுமே குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது வள்ளலாருடைய உறுதியான நம்பிக்கை.

6. பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
பொருள் அரு ளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப்
பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் என என் தனக்கருள் புரிந்த
தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின்
முதலர இயற்றிய துரையே.

Koviloor Digital Library

ஆணவத்தை அகற்றுகின்ற ஒரே பொருள், அருள் அனுபவம்தான். அதுமட்டும்தான் பொருள். அந்த பொருளை அடைவதற்கு பத்தியம் தேவை. அதுதான் உயர் அனுபவம். இந்த உண்மையை உறுதியாக பற்றிக் கொண்டால் போதும். "அருள் அலாது அணுவும் அசைந்திடாது" எனவே நான்கு வகை அனுபவங்களில் அருள் அனுபவம் மட்டும்தான் பொருள் ஆகிறது. அதைப் பற்றிக் கொண்டால், இறை அனுபவம் தானே தோன்றிவிடும். உயர் அனுபவத்தை இதற்கு பத்தியமாக கொள்ள வேண்டும். மருந்து சாப்பிடும் ஒருவர் அதற்கு இடையூறு செய்யாத உணவையே உண்ண வேண்டும். இதைத்தான் பத்திய உணவு என்று சொல்லுவர். உப்பில்லாப்பத்தியம் என்று இதைத்தான் குறிப்பர். உயிர் அனுபவம் உடையவர்களுக்கு மட்டுமே அருள் அனுபவம் பயன்படும். முத்து பல்லக்கில் ஏறிச் சென்று முதலில் அருள் அரசு புரிந்த அருள் துரை ஆட்சி செய்த அருளாட்சி வேந்தர் ஆவார், திருஞானசம்பந்தபெருமான். திருஞானசம்பந்தர் வள்ளல் பெருமானுக்கு சற்குருவாக அமைந்தார். அவர் 7ம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி, சமய வெறியர்களை அடக்கியவர். வள்ளலார் குறிக்கோளும் அதுதான். ஆதலால் அவரைப்போன்ற மாமனிதரை மட்டும் குருவாக ஏற்க வேண்டும் என நமக்கு அறிவுறுத்துகிறார். இதனை வள்ளல் பெருமான், "வாசி நடத்தி தருவாண்டி, ஒரு வாசியிலே இங்கே வருவாண்டி, ஆத இல் இருளை உருவாண்டி, அவன் அற்புத தாள் மலர் பாருங்கடி" என்று போற்றி இருக்கிறார்.

Koviloor Digital Library

7) அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ
அருட்சிவ மதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தான் வருத்தம்
பார்த்தரு ளால்எழுந் தருளி
மிடியற எனைத்தான் கடைக்கணித் துனக்குள்
விளங்குவ அடிமுடி என்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று
வயதினில் அருள்பெற்ற மணியே

இறைவனுடைய அடி, முடி எவை? இந்த கேள்விக்கு இப்பாடல் விளக்கம் தருகிறது. அடி எது முடி எது என்று இந்த கேள்விகளை பலமுறை கேட்டுக் கொண்டே இருந்தார் வள்ளலார் ஒருநாள் திடீரென்று அவர்முன் சம்பந்த பெருமான் தோன்றினார். இறைவனுடைய அடியும் முடியும் வேறு எங்கும் இல்லை. உன்னுள்தான் இருக்கிறது. அதைத் தக்கமுறையில் புரிந்துகொண்டால்போதும், இவ்வாறு புரிந்து கொள்ளும்படி செய்த சம்பந்த பெருமானைத்தான் தான் முதலில் வழிபட்ட முருக பெருமானாகவே வள்ளலார் நம்பினார். அதனால் அவருடைய ஐயத்தை தீர்ப்பதற்கு, சம்பந்தர் தோன்றினார். இதுதான் உத்தம சற்குருவின் இயல்பாகும். எனவே மனிதர்களை, இத்தகைய உயர்ந்த சந்தேகங்களை போக்கி அருளும், குருவாக, கொள்ளகூடாது. அமனிதராகிய சம்பந்தர் போன்றவர்களே உத்தம சற்குரு வாக விளங்க முடியும் என்று தெளிவாக தெரிவித்து இருக்கிறார், வள்ளலார். இத்தகைய பேராற்றல் உடையவராக அவர் விளங்கியதால்தான் போதுமான மொழி அறிவு

Koviloor Digital Library

தோன்றாத போது கூட சம்பந்தர் மாமனித குருவாக விளங்கி இருக்கிறார்.

8. செவ்வகை ஒருகால் படுமதி அளவே
செறி பொறி மனம் அதன் முடிவில்
எவ்வகை நிலையும் தோற்றும் நீ நினக்குள்
எண்ணிய படி எலாம் எய்தும்
இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன்
றெனக்கருள் புரிந்தசற் குருவே
தெவ்வகை அமண இருளற எழுந்த
தீபமே சம்பந்தத் தேவே

எது மனம்? எது அற்புதம்? எப்படி நோவாமல் நோற்பது? நல்ல சூழ்நிலையில் இயற்கை அறிவு என்கிற மதி, புலன் பொறிகளை ஒன்றுபடுத்துகிறது. அப்போது தோன்றுகிற உயர் ஒளிதான் மனம் என்பது. அதன் முடிவில் நாம் பார்க்க விரும்புகிற எல்லா நிலைகளும் தோன்றுகின்றன. இறைவனுடைய அருளால்தான் இந்த அற்புதம் தோன்றுகிறது. நாம் மனதில் எண்ணிய அத்துணை செயல்களும், எண்ணிய படியே நிகழ்கின்றன. இது நம்முடைய முயற்சியாய் நடக்கும் அற்புதம் அன்று.இறைவனுடைய அருளால் நடக்கும்அற்புத மாகும். இது ஒன்றுதான் வருத்தமில்வகை என்கிற நோவாது நோற்று சாவாது வாழ்வதற்கு 'அடிப்படையான அருள் அற்புதம் ஆகும். இதை நன்றாகபுரிந்துகொண்டால்போதும். நாம் விரும்புகிற எல்லாம் இறை அருளால் நிறைவேற்றியே தீரும். இதை திருஞான சம்பந்தர் வள்ளலாருக்கு உணர்த்

Koviloor Digital Library

தினார். இதைத்தான் வள்ளலார் 'அருள் அலாது அணுவும் அசைந்திடாது' என்று பாடினார். சமண மதத்தவர், சைவர்களிடம் கொண்ட பகையை போக்குவதற்கு திருஞான சம்பந்தர் 'தெல்லகை அமண இருளற எழுந்த தீபமே' என்றும் 'சம்பந்தத் தேலே' என்றும் மனம் மொழி மெய்களால் உருகி உருகிப் பாடுகின்றார். எதையுமே நாமே செய்து விடலாம் என்று எண்ணுகிறபோது ஆணவம் வளருகிறது. அருஞ்செயல் நிகழ்வதே இல்லை. வள்ளலார், திருஞான சம்பந்தர் பெருமானை, மாமனித வடிவத்தில் தோன்றி தன்னை காத்தருளியத் தெய்வம் என்றே வணங்குகிருர். பொத்திய மூல மலப்பிணி போக்கும் அருளே பொருளாகும் என்று உறுதியாக தெரிவிக்கிறார்.

9) முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்டு
ஐயம்நீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்னுயிர்க் குயிர்எனுங் குருவே

தனக்கு அனுபவம் தோன்றுவதற்கு முன்னே நடந்த அற்புத செயல்களையும், அனுபவம் தோன்றிய பிறகு நடந்த அற்புத செயல்களையும் பற்றி நீண்ட நேரம் சிந்தித்து சரியான பதில் கிடைக்காமல், வள்ளலாருக்கு மயக்கமாக

Koviloor Digital Library

தோன்றியது, அந்த மயக்கத்தை சம்பந்த பெருமான் புரிந்து கொண்டார். வள்ளலார் முன் தோன்றி தேவாரத்தில் ஒரு வரியை நினைவூட்டினார். அவ்வரிதான் ''உனில் உயிர்ப்பை (மூச்சை) ஒடுக்கி, ஒண்சுடர் ஞான விளக்கினை ஏற்றி'' என்பது பெரியோர் இடத்தில் மரியாதை இல்லாமல் தாமே எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்பதுதான் அகங்காரம் என்கின்ற பொத்திய மூலப்பிணியாகும். சம்பந்தர் தோன்றி மூச்சை எப்படி அடக்கி மனக்குழப்பத்தை போக்கி கொள்வது என்பதை செய்து காட்டுகிறார். ஆளாண்மை என்ற மனநிலைக்கு ஆணவம் ஊரு செய்யக் கூடியது. அதனால் தானே எதையும் செய்துவிடமுடியாது. அருள் அலாது அணுவும் அசைந்திடாது என்பதை சம்பந்தர் வள்ளலாருக்கு போதித்து அருளினார்.

10. வருபகற் கற்பம் பலமுயன் ருலும்
 வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின்
 உறுபெருங் கருணை என்உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப்
 பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
 உயர்தனிக் கவுணிய மணியே.

வள்ளலாருக்கு திருஞானசம்பந்த பெருமான் பல பிறவிகளில் அடைய வேண்டிய அற்புதங்களை எல்லாம், ஒரே பகலில் அறிவித்து அருளினார். அடி என்பது அறிவையும்

Koviloor Digital Library

அனுபவத்தையும் குறிக்கும். முடிஎன்பது அந்த அனுபவத்தை பெற்ற பிறகு முடியாத செயல் ஒன்று இருக்க முடியாது. சம்பந்த பெருமான் வள்ளலாரை உருகிப் பெருகச் செய்து இருக்கிறார். அதன் விளைவாக, சம்பந்த பெருமானுக்கு கிடைத்த அரும்செயல் வள்ளலாருக்கும் கிடைத்து இருக்கிறது. திருஞானசம்பந்தர் திருமணகாலத்தில் வந்திருந்த அனைவரையும் ஒளிவண்ணமாக மாறச் செய்தார். வள்ளலாருக்கு அருள் அனுபவம் கிடைத்த பிறகு அவர் இறை அனுபவத்தையும பெற்று விளங்கினார். ஒளியில் மறைந்த அத்தனை பேரும், ஞான ஒளி மயமாகவே மாறினார்கள். சம்பந்தர் தோன்றிய கவுணிய குலத்தில் முதல், அருள் அரசு புரிந்தவர், சம்பந்த பெருமான் தான். மணியும் ஒலியும் பிரிக்க முடியாதவை. மருந்தை மணியாக மாற்றுவது உண்டு. அதற்கு மணி, மந்திர. ஔடதம் என்று மூன்றும் சேர்ந்து நின்றே துணை பிரிவன ஆகும். இதை மருந்தரியேன், மணி அறியேன் மந்திரம் ஒன்று அறியேன். என்று குறிப்பிடுகிருர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து இறைவனைக் காண தியான வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, ஏராளமான மந்திரங்களை பயன்படுத்தக்கூடாது, இதைத் தான் மந்திரம் ஒன்றறியேன் என்று குறிப்பிடுகிறார். அருட் பெருஞ்ஜோதி என்ற மந்திரத்தை ஒரு இயந்திரமாக அமைத்துக் கொள்கிறோம். மந்திரம் ஒரு திருவடி இறைவனின் மற்றொரு திருவடி தந்திரமும் ஆகும். இதைத்தான் ராமாவளி மந்திர, இயந்திர, தந்திரபாதம் என்று வள்ளலார் பாடுகிறார். மந்திரத்தை இயந்திரமாக எழுதிப் பார்ப்பது ஒரு

Koviloor Digital Library

திருவடி. இயந்திரத்தையும் தந்திரத்தையும் ஒன்றாக சேர்ந்தால் இறைவனின் மற்றொரு திருவடி உருவாகிறது. யோக தந்திரம் என்பது வேறு. தந்திர யோகம் என்பது வேறு. தந்திர யோகம் என்பது சிவ யோக ஆசனங்களால் தாகம் தவிர்த்து கொள்ளுவதைக் குறிக்கும். இதற்கு வேறு பொருளைச் சொல்லி குடும்ப வாழ்க்கையை சீர் குலைப்பது போலித் துறவிகளின் வஞ்சக செயலாகும். இதைத்தான் பல பிறவிகளில் முயன்று அடைய வேண்டிய அரும் செயலை வள்ளலாருக்கு ஒரு பகற்பொழுதில் ஞானசம்பந்தர் உணர்த்தியிருக்கிறார்.

11) சீரார் சண்பைக் கவுணியர்தம் தெய்வ மரபில் திகழ்விளக்கே
தெவிட்டா துளத்சில் தித்திக்கும் தேனே அழியாச்செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என் இரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில் உமை இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலைமொழிக் குருந்தே என் ஆருயிருக் கொரு துணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமானே நின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ் செல்வத்தில் பிறங்குவரே

Koviloor Digital Library

வள்ளள் பெருமான் திருஞானசம்பந்தரை சற்குருவாக ஏற்றுக் கொண்டார். அவர் ஞான யோக பரிணாமத்தால் உணர்த்திய ஞான யோக விளைவுகள் எல்லாம் அடைந்து இன்புறுகிறார். இந்த இன்பத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறார். பிற உயிர்களுக்கு ஞான யோக பரிணாமத்தில் கிடைக்கும் இன்பத்தை வழங்குகிறபோது, அவர் தாமும், அந்த இன்பத்தை அடைகிறார். மற்றவர்களும் அடையும்படி செய்கிறார். கவுணியகுலக்கொழுந்தாகிய சம்பந்தரை தன்னுடைய சற்குருவாக ஏற்றுக் கொண்ட நாளில் இருந்து வள்ளலார் செய்து வரும் அற்புதங்களை தொகுத்து ஒரு நூலாகவே `யற்றி இருக்கிறார். காரணப்பட்டு கந்தசாமி என்ற பக்தர். அவர் குறித்து இருக்கும் அற்புதங்களை எல்லாம் 266 அற்புதங்களாக வள்ளலார் சரித்திர கீர்த்தனை என்ற நூலில் கண்டு இன்புறலாம். பிரபந்த திரட்டு என்ற நூலை அச்சிட்டு உதவிய பெருந்தகை புதுக்கோட்டையில் வாழ்ந்த முத்தையா செட்டியார் என்ற அன்பர் ஆவார். இவர் ஒரு ஒப்பற்ற தியான வாழ்க்கையில் ஈடுபட்டவர். அட்டாங்க யோகத்தில் முதல் ஐந்து உறுப்புக்களையும் புற யோக உறுப்புகள் என்பர். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரக்தியாகரம் என்பன. இவற்றுள் பிரத்தியாகரம் என்பது புலன்கள் ஐந்தையும் ஒருமுகப்படுத்து வது.இதனால் மனம் ஒருவழிப்படுவது மட்டுமன்றி, அக -யாக உறுப்புகள் ஆகிய தாரணை, தியானம், சமாதி என்ற மூன்றையும் ஒன்றாக சேர்த்தே எண்ணும் நிலேயும் ஏற்படும். அப்படி எண்ணுவதை பதஞ்சலி முனிவர் சம்யமம் செய்தல்

Koviloor Digital Library

என்பார். மனம் ஒருவழிபடும் பொழுது புலன்களும் நல்வழிப் படுவதோடு சமாதியும் தியானமும் தானே உருவாகிவிடும். சம ஆதி என்று சமாதியை பிரிக்க வேண்டும். உள் உணர்வை யும், புற உலக அனுபவத்தையும் ஒன்றாக சேர்ந்து பார்க் கும் பொழுதுதான் அற்புதங்கள் தோன்றுகின்றன. சம்யமம் என்ற சொல்லுக்கு அகயோக உருப்பு மூன்றும் தனித்தனியே வேலை செய்வன அல்ல, ஒன்றாகத்தான் சேர்ந்து வேலை செய்யும் என்று பொருள். அப்பொழுதுதான் அற்புதம் செய்கிற உயர் ஒளி என்கிற மனம் தோன்றுகிறது. இதைத் தான் செல்லகை ''ஒரு கால் படுமதி அளவே செறிபொறி மனம்'' எனக் கூறுகிறார். இம்முறை இயற்கையாகவே அற்புதங்கள் உருவாக்கவல்லது. துன்பம் உண்டாகமலே இன்பத்தை பெருக்கவல்லது. இதை, இவ்வகை ஒன்றே வருத்தமில் வகை என்று முன்னே குறிப்பிட்டு இருக்கிறார். வ ள் ள ல ா ை ர வி ட சம்பந்தருக்கு இந்த முறை தெளிவாக தெரிந்து இருந்தது. அ த ன ா ல் த ா ன் சம்பந்தரை வள்ளலார் சற்குருவே ஞானமணி விளக்கே என்று எல்லாம் பாராட்டுகிறார். இதை வரலாற்றில் வைத்தும் உணரலாம் திருநாவுக்கரசர் சிதம்பரம் செல் கிறார். நடராஜப்பெருமான் திருஉருவத்தை உற்று உற்று நோக்கிக் கொண்டுநிற்கிறார். இதைத்தான் உற்று உற்று நோக்கின் ஒளிவிடும் மந்திரம்'' என்று திருமூலர் குறிப்பிடுவ தாகும். ''ஐந்து பேர் அறிவும் கண்களே காரணம் ஓர் நான்கும் சித்தமே யாக'' தன்னை மறந்து இன்புற்றிருக் கிறார் திருநாவுக்கரசர். இதை வள்ளல் பெருமான் ஆளுடைய அருள்மாலை என்பதிலும் ஆளுடைய நம்பிகள் அருள்மாலை

Koviloor Digital Library

என்பதிலும் பாடி இருக்கிறார். தாரணை, தியானம், சமாதி என்ற மூன்றும் பிரிக்க முடியாமல் ஒன்றி நிற்கிற பொழுது ஓகும் செம்பொன்னும் ஒக்கலே நோக்கினார். கூடும் அன்பினில் கூம்பிடவே அன்றி சீரும் வேண்டா விரவில் விளங்கினார் என்று மனதாரப் பாராட்டுகிறார் சேக்கிழார்.

வார்த்தை

வார்த்தை என்றால் அருளின் ஆற்றலால் அழியாத நல்ல பதிவு ஏற்படும்படி சொல்வது தான். வார்ப்புத் தொழிலின் மூலம் உறுதியான பாத்திரங்களை உருவாக்குவது போல வார்த்தைகள் உருவாகும். பல பொருள்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது வேறு. அப்பேச்சுக்களால் கண்டுபிடிக்கப்பட்ட அழியாத முடிவுகள் வேறு. பேசுவது ஆராய்வதைக் குறிக்கிறது. ஆனால் வார்த்தை என்பது வார்த்து எடுக்கின்ற முடிவுகளை குறிக்கின்றது. இதைத்தான் 'பேச்சு வார்த்தை' என்ற சொற்றொடரால் சொல்லும் பழக்கம் நம்மிடை இருக்கின்றது. 'வார்' என்பது வார்த்து எடுப்பது. 'தை' என்பது உள்ளத்தில் தைப்பது போல வாழ்க்கையில் மேற்கொள்வது. இதற்கு அடிப்படை அருள்தான்.

உரை

உரு + ஐ = உரை

உணர்வு தோன்றும் படி உரைப்பதற்கு உரை என்று பெயர். மறையாத பதிவு ஏற்படும்படி (உரைப்பது) சொல்வது.

Koviloor Digital Library

வாசகம்

வசி + அகம் = வாசகம்

மறக்க முடியாதபடி நம் நினைவில் நிற்பது (வசிப்பது) வாசகம்.

—✻—

ஸப்த கோ சங்கள்

தூல உடம்பு அன்னமய கோசம்
(உணவு உடம்பு) பிராணமய கோசம்
(மூச்சு உடம்பு) கொண்டது.
சூட்சும உடம்பு மனோமய கோசம்,
(உணர்வு உடம்பு) விஞ்ஞானமய கோசம்
(அறிவு உடம்பு) கொண்டது
இன்ப உடம்பு காரண உடம்பு
(இம்மை இன்ப உடம்பு) மகா காரண உடம்பு
(மறுமை இன்ப உடம்பு) மூல காரண உடம்பு
(பேரின்ப உடம்பு) கொண்டது. ஆகஏழு.

வள்ளல் பெருமான் உணர்த்தியபடி சுத்த தேகம் பெற வெள்ளைக் கரிசலான் கண்ணி, பிரணவ தேகம் (பொன்னுடம்பு) பெற மஞ்சள் கரிசலாங் கண்ணி, ஞான தேகம் (மெய் அறிவுடம்பு) பெற வல்லாரை தினம் பயன்படுத்த வேண்டும்.

Koviloor Digital Library 8988

R65(வள்)

ஐம்பூதவியல்

ஆகாயம் காற்று நெருப்பு நீர் பூமி என்பன ஐம்பூதங்கள். இந்த ஐம்பூதங்களும் அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது. ஆகாயம் ஒரு குணமும் காற்று இரு குணமும் நெருப்பு மூன்று குணமும் நீர் நான்கு குணமும் பூமி ஐங் குணமும் கொண்டவை என மெய் ஞானமும் இன்றைய விஞ்ஞானமும் விளக்கியிருக்கின்றன. ஒளி (ஆகாயம்) எங்கும் பரவி இருக்கும் தன்மை உடையது. ''ஒளி ஒன்றே அண்ட பகிரண்டமெலாம்' என வள்ளலார் கூறுகிறார். அதனோடு ஆற்றல் சேரும் பொழுது காற்று ஆகிறது. அதனுடன் வெப்பம் சேரும் பொழுது நெருப்பு ஆகிறது. அதனுடன் குளிர்ச்சி (தன்மை) சேருகிறபொழுது நீர் ஆகிறது. அதனுடன் திடநிலை (உறுதி) சேருகிற பொழுது நிலம் ஆகிறது. ஒவ்வொரு சக்தியும் ஒவ்வொன்றுடன் சேருகிற பொழுது ஒவ்வொரு குணமும் கூடுகிறது. ஆகாயத்திற்கு ஸப்தமும், காற்றுக்கு ஸப்தத்துடன் உணர்வும், (உராய்தல்) நெருப்புக்கு இவற்றுடன் சுடும் தன்மையும், நீருக்கு இவற்றுடன் குளிர்ச்சியும், பூமிக்கு இவற்றுடன் வாசனையும் (மண் வாசனை-கந்தம்) சேருகிறது. பஞ்சபூதத்தலங்களில் பூமிக்கு காஞ்சிபுரமும், நீருக்கு திருவானைக்காவலும் நெருப்புக்கு திருவண்ணாமலையும் காற்றுக்கு ஸ்ரீகாளஹஸ்தியும், ஆகாயத்திற்கு சிதம்பரமும் ஆகும்.

Koviloor Digital Library

குரு

குரு என்பவர் ஒருவரது இருளை நீக்குபவர். அதாவது அந்த நபரின் அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான அருளைப் பெற உதவுபவர் அவர் சீடனின் வாகனமாக இருந்து ஆண்டவரிடம் அழைத்துச் செல்பவர். அவர்தான் கடவுளை காண்பிப்பவர். மனித குரு ஒருவருக்கு நிறைய பேர் அமையலாம். அவர்கள் எல்லாம் வழிகாட்ட, படிப்பிக்க வந்த ஆசான்கள் ஆவர். கடவுளை அறிந்த மாமனிதர்களில் ஒருவர் தான் குருவாக அமைய முடியும். வள்ளல் பெருமான் மனிதர்களை குருவாகக் கொள்ளவில்லை கடவுள் தன்மை வாய்ந்த மாமனிதர்களான முருகன், திருஞானசம்பந்தரைத் தான் தன் குருவாகக் கொண்டார். ஏரு நிலமிசை எறினார். குருவும் சீடனும் சந்திப்பது இறைத்தன்மை நிறைந்த ஒருவரும் இறைத் தன்மை அடைய முயற்சிக்கும் ஒருவரும் சேர்வது ஆகும். குரு சீடனது துன்பத்தையோ இன்பத்தையோ பற்றி கவலைப்படமாட்டார். அந்த ஆன்மா என்ன வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். எப்பொழுது சீடனது துன்பம் தீரும் என்பதும் அவருக்குத் தெரியும். சீடனது கடமை என்னவென்றால் எது நடந்தாலும் குருவிடம் விளக்கம் கேட்காமல் அவர் சொன்னபடி உடனே பணிந்து செயல்பட வேண்டும்.

குரு பார்க்கும் கோணத்தில் சீடன் பார்க்க நாளாகும். குருவின் மனம் கோணினால் உடனே சீடன் நான் என்ன தவறு செய்தேன், என்னைத் திருத்திக் கொள்கிறேன் என்று விண்ணப்பிக்க வேண்டும். குருவின் நிழல்போல்

Koviloor Digital Library

கூடவே இருக்கவேண்டும். அவரை விட்டுப் பிரியவே கூடாது. அப்பொழுது தான் அவருடைய ஒளிக் கதிர்கள் சீடன்மேல் தொடர்ந்து ஊடுருவி சீடனின் அஞ்ஞான இருளை நீக்கும். பக்குவமடைந்த சீடனைத் தேடி குருவே வருவார். அதுவரை மாமனிதர் குருவாகக் கிடைக்க மாட்டார். இறைப் பசி மேலீட்டால் இறைவனே ஒருவரை அனுப்புவார். நாம் அனைவரும் கடலில் தோன்றி மறையும் நீர்க்குமிழிகள் போல. இறைவன் கடல்போல் நாம் எலட்ரிக் பல்ப்புகள் போல் இறைவன் அதன் நடுவில் பிரகாசிக்கும் ஒளிபோல்

உடல்நலம் பேண

வெந்நீர் அருந்துதல், குளித்தல், வாரம், இருமுறை நல்லெண்ணெய் குளியல். வாரம் ஒரு நாள் ஒரு வேளை உண்ணுதல். மாதம் ஒரு முறை பேதிக்கு சாப்பிடல். மாதம் இருமுறைபோகம் செய்தல். தினமும் கரிசாலை கொண்டு பல்துலக்கி அண்ணாக்கில் தேய்த்தல். மல ஜலம் முறையே கழிய வயிற்றின் இருபக்கங்களிலும் கைகளினால் மாறி மாறி அமுக்கிவிடல். தினமும் காலை பல்லழுக்கு, கண்ணழுக்கு, காதழுக்கு, தொப்பூழ் அழுக்கு, பிறப்பிட அழுக்கு நீக்குதல், காலை சிறிது நேரம் மூச்சை உள் இழுத்து நிறுத்தாமல் வெளிவிட்டு நுரையீரல்களை சுத்தப் படுத்துதல். சிறிது நேரம் புருவ மத்தியில் நினைவை வைத்து தியானம் செய்தல். உண்டபின் பல் ஈறுகளைத்

Koviloor Digital Library

தேய்த்துவிட்டு குறைந்தது பத்து முறையாவது வாய் கொப்பளித்தல். இதனால் கன்னங்களின் உள்பக்க நரம்புகள் அசைந்து ஏப்பம் வெளிவந்து உணவு சீரணமாகிறது. உண்டபின் கடின வேலைகள் செய்யாது சிறிது நேரம் ஓய்வு எடுத்தல். மாலை புருவமத்தி தியானம் செய்தல் முடிந்த வரை இடம் பக்கமாய் படுத்தல் முன்னிரவில் தூங்கி அதிகாலை விழித்து கடமைகளைச் செய்தல். இவற்றுடன் மனநலம் முக்கியம். உடல் நலத்திற்கு இம்மன நலத்தால் மறுமையின்பமே உண்டாகும். அம்மன நலமும் இனநலத்தால் வலிவுறும். நல்ல இனமே சிறந்த துணை. தீய இனம் துன்பத்தைத் தரும்.

ஆசை

ஆசைகள் தான் மனிதனின் பரம விரோதி. மனிதனுடைய இகபர ஆன்மீக வாழ்க்கைக்கு பெரியதடை. ஆசைகள் நிறைவேரு விட்டால் தாபம் கோபம் முதலிய பஞ்சமகா பாதகங்கள் செய்யத் தூண்டும். இதற்கு மனம்தான் காரணம். ஆசையை அடக்கியவன் இவ்வுலகையே வெல்லலாம். ஆசையறுமின் ஆசையறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின் எனத் திருமூலர் சொல்கிறார். ஆசைப்படப்பட ஈசன் கூட விலகிப் போகிறார். நல்ல பழக்கங்களை கற்றுக் கொண்டு கடைபிடிக்க வேண்டும். தான் என்ற எண்ணத்தை விட்டால் தான் இறைவன் உன்னில் வசிப்பார். நமக்கு ஒரே ஒரு எண்ணம் தான் இருக்க வேண்டும். அது கடவுள் எண்ணமாக இருக்க வேண்டும். தியானத்தில் அமைதியின்மை

Koviloor Digital Library

களைய வேண்டும். எப்பொழுதும் நம்முன் ஓடும் எண்ணங்களை கவனிக்க வேண்டும். ஏன், எப்படி, 'இந்த எண்ணம்' ஏற்பட்டது என ஆராய வேண்டும். தன்னைத்தான் அறிந்து வெற்றி கொண்டால் அதுதான் இறையனுபவம் 'ஆசைக்கு ஓர் பிறப்பு' என்பார்கள். நான் எனது என்னுடையதுஎன்பது தன்னைவிட்டு அகல வேண்டும். எது கிடைத்தாலும், எது உண்டாலும் எந்த இன்பத்தை அனுபவித்தாலும், எந்தத் துன்பத்தை அனுபவித்தாலும், அது இறைவன் தந்ததே என எண்ணி எஃணிப் பழகவேண்டும். இருளடைந்த (ஆசைகள் நிறைந்த) ஒரு அறையின் இருளைப் போக்க இருளுடன் போராடி என்ன பயன்? ஒரு சிறு ஒளிவிளக்கை ஏற்றினால் இருள் தானாக ஓடிவிடும். அருள் தான் ஒளி விளக்கு. ஆசைகள் அற்றால் அருள் தானே வந்துறும்.

காப்புச் செய்யுள்

''அருட்சபை நடம்புரி அருட்பெரும் ஜோதி
தெருட்பெரும் சீர்சொல் திகழ்வ சித்தியே''

மகா மந்திரம்

அருட்பெரும் ஜோதி அருட்பெரும் ஜோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி

Koviloor Digital Library

வள்ளலார் வரலாற்று குறிப்புகள்

இயற்பெயர்	:	இராமலிங்கம்
சிறப்புப் பெயர்	:	திருவருட் பிரகாச வள்ளலார்
பிறப்பு	:	5-10-1823 சுபானு புரட்டாசி 2 சித்திரை நட்சத்திரம்
பிறந்த ஊர்	:	மருதூர்
பெற்றோர்	:	இராமையா சின்னம்மையார்
உடன் பிறந்தோர்	:	சபாபதி, பரசுராமர். சுந்தரம்மாள், உண்ணுமலையம்மாள், இராமலிங்கர் 5 வது அருட் புதல்வர்
உரைவிடங்கள்	:	சென்னை, கருங்குழ, வடலூர்' மேட்டுக்குப்பம்.
இயற்றிய நூல்கள்	:	ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்டவாசகம்

Koviloor Digital Library

அருளிய பாடல்கள் : 'திருவருட்பா'

நிறுவிய நிலையங்கள் : சன்மார்க்க சங்கம் 1865
தருமச்சாலை 23-5-1867
சித்திவளாகம் 1870
ஞான சபை 25-1-1872

சித்தி : 30-1-1874 ஸ்ரீமுக தை 18

Koviloor Digital Library

திரைக்குரிய தத்துவ விளக்கம்

ஆன்மப் பிரகாசத்திற்குள்ளிருக்கும் ஜோதியை மறைக்க மாயா சக்திகளாகிய 7 திரைகள் உண்டு. அவை யாவன.

1.	கருப்புத்திரை	—	மாயாசக்தி
2.	நீலத்திரை	—	கரியா சக்தி
3.	பச்சைத்திரை	—	பராசக்தி
4.	சிவப்புத்திரை	—	இச்சா சக்தி
5.	பொன்மைத்திரை	—	ஞான சக்தி
6.	வெண்மைத்திரை	—	ஆதி சக்தி
7.	கலப்புத்திரை	—	சிற்சக்தி

ஜோதி சொரூபமான ஆண்டவனை நீங்கள் தரிசிக்க வேண்டுமாயின், உங்களை இயக்கும் இந்த ஏழு சக்திகளையும் ஒவ்வொன்றாக நீங்கள் அகற்ற வேண்டும். அப்போதுதான் அகத்திலே ஜோதியைக் கண்டு தரிசிக்கலாம்.

ஆயுள் நஷ்டஞ் செய்வன நான்கு. அவையாவன.
ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம்
சுவர்க நரகம் இருக்கிற இடம் மனித தேகம்.